கோரிக்கை	(ரூபாய்)
இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்	
62 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்	13,34,38,551
பெரு மொத்தம்	**49,12,08,217**

10. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1993–94, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993–94 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993–94 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 28–7–2004 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1993–94 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 1993–1994 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)
அ.	**வருவாய்க் கணக்கில் செலவு**	
11	மாவட்ட நிருவாகம்	13,05,634
19	பொதுச் சுகாதாரம்	1,99,09,539
20	வேளாண்மை	8,29,60,053
22	கால்நடை வளர்ப்பு	40,13,494
37	பொதுப் பணிகள்–பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடங்களும்	1,05,69,250
38	சாலைகளும் பாலங்களும்	17,06,86,956
45	இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்	3,87,09,652
49	நகராட்சி நிருவாகம்	84,67,745
மொத்தம்–அ. வருவாய்க் கணக்கில் செலவு		**33,66,22,323**
ஆ.	**வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு**	
56	சாலைகள்–பாலங்கள் குறித்த மூலதனச் செலவு	2,11,72,544
மொத்தம்–ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு		2,11,72,544
பெரு மொத்தம்		**35,77,94,867**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS